# TEST 1

Total Questions – 150

தமிழ் - 75 கேள்விகள்
பொதுஅறிவு - 55 கேள்விகள்
கணிதம் - 20 கேள்விகள்

Syllabus

| S.No. | Topics | No. Of Questions |
|---|---|---|
| தமிழ் | 1. சொல்லும் பொருளும்<br>2. பிரித்து எழுதுக<br>3. சேர்த்து எழுதுக<br>4. சரியான விடையை தேர்வு செய்க<br>5. கோடிட்ட இடத்தை நிரப்புக<br>6. கலைச்சொல் அறிதல்<br>7. ல,ள,ழ,ர,ற,ன,ண வேறுபாடு அறிதல்<br>8. திருக்குறள்: ஊக்கமுடைமை<br>9. அறிஞர்கள்: முடியரசன் | 75 |
| பொதுஅறிவு | தேசிய சின்னங்கள் - 6th Std<br>பன்முகத்தன்மையினை அறிவோம்<br>மக்களின் புரட்சி- 8th std<br>வேற்றுமையில் ஒற்றுமை- 12th std History<br>Previous year questions 2023 (24.03.2023) | 55 |
| கணிதம் | தனி வட்டி | 20 |

1. கீழ்கண்ட கூற்றுக்களை ஆராய்க
a. முடியரசனின் இயற்பெயர் துரைராமு
b. முடியரசன் இயற்றிய நூல்கள் பூக்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார்
c. முடியரசன் திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப் பெற்றவர்

A) a, b, c தவறு B) a, b தவறு
C) a மட்டும் தவறு. D) b மட்டும் தவறு

2. "மாநிலத்தில் ------------, ------------, ---------------, ------------- நானிலத்தில் கண்ட பெரும் நாகரிக மாந்தன் அவன்" – கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?

A) குறிஞ்சி ,முல்லை, மருதம், நெய்தல்
B) குறிஞ்சி, மருதம் ,முல்லை, நெய்தல்
C) முல்லை ,மருதம் ,குறிஞ்சி, நெய்தல்
D) குறிஞ்சி ,முல்லை ,நெய்தல் ,மருதம்

3. கீழ்க்கண்டவற்றுள் கலைச் சொற்களில் தவறானது எது?

A) கடற்பயணம். – VOYAGE
B) தொழில் முனைவோர். – ENTREPRENEUR
C) கலப்படம். – ADQLTERATION
D) வணிகர். – MERCHANT

4. கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க

கூற்று 1 : உணர்த்துவதில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்

கூற்று 2 : ண, ன, ந, ல, ழ, ள, ர, ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துக்கள் ஆகும்

A) கூற்று 1,2 சரி
B) கூற்று 1,2 தவறு
C) கூற்று 1 சரி , கூற்று 2 தவறு
D) கூற்று 1 தவறு , கூற்று 2 சரி

5. பொருத்துக

a. வானம். 1. வேலை
b. வாணம். 2. குளிர்ச்சி
c. பணி. 3. வெடி
d. பனி 4. ஆகாயம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 4 | 1 | 2 |

6. கீழ்க்கண்டவற்றில் சொல்லும், பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?

A) மாசற. – குற்றமில்லாமல்
B) சீர்தூக்கின். – ஒப்பிட்டின்றி ஆராய்ந்தால்
C) நட்டல் – நட்பு கொள்ளுதல்
D) ஒப்புரவு. – எல்லோரையும் சமமாக பேணுதல்

7. கீழ்கண்டவற்றில் சொல்லும் பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?

A) தண்டருள். – குளிர்ந்த கருணை
B) கூர் – மிகுதி
C) செம்மையருக்கு. – பெரியோருக்கு
D) ஏவல். – தொண்டு

8. "எக்களிப்பு மீதூர --------, ------------- முதல் பண்டங்கள் ஏற்றி பயன்நல்கும் வாணிகத்தால்" –இப்பாடலில் கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?

A) ஏலம், மிளகு.
B) ஏலம், இலவங்கம்
C) மிளகு, சுக்கு.
D) மிளகு, இலவங்கம்

9. "கண்டங்கள் சுற்றி கலமேறி வந்தவன் தான்" இந்த பாடல் வரிகள் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) புதியதொர் விதி செய்வோம்
B) புதியதோரு விதி செய்வோம்
C) புதியதோர் விதி செய்வோம்
D) புதியதொரு விதி செய்வோம்

10. கீழ்கண்ட கூற்றுக்களை ஆராய்க

கூற்று 1 : நாவின் அடி மேல் அண்ணத்தில் முதல் பகுதியை தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது.

கூற்று 2 : ரகரம் இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்

A) கூற்று 1,2 சரி
B) கூற்று 1,2 தவறு
C) கூற்று 1 சரி , கூற்று 2 தவறு
D) கூற்று 1 தவறு , கூற்று 2 சரி

11. கீழ்கண்ட கூற்றுக்களை ஆராய்க

கூற்று 1 : நா (நாவின் இரு பக்கங்கள் மடித்து) மேல் அண்ணத்தின் நடுபகுதியை தொடுவதால் ளகரம் தோன்றும். இதனை பொது ளகரம் என்கிறோம்.

கூற்று 2 : ளகரம் ன போல இருப்பதால் ளகர னகரம் என்று கூறுவர்

A) கூற்று 1,2 சரி
B) கூற்று 1,2 தவறு
C) கூற்று 1 சரி , கூற்று 2 தவறு
D) கூற்று 1 தவறு , கூற்று 2 சரி

12. தளராத ஊக்கம் உடையவன் இடத்தில் எது வழி கேட்டுச் செல்லும் என திருக்குறள் கூறுகிறது?

A) செல்வம்
B) உயர்வு
C) புகழ்.
D) சிறப்பு

13. கீழ்கண்டவற்றுள் சொல்லும் பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?

A) உள்ளுவதெல்லாம் – எண்ணுவதெல்லாம்
B) மற்று. – பின்பு
C) தள்ளாமை. – தவிர்ப்பது
D) நீர்த்து. – தன்மையுடைய

14. ----------, ----------, -------------- ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையை பெற்றான் தமிழன் என முடியரசன் கூறுகிறார்?

A) ஊர், கிராமம், நாடு
B) ஊர் ,கிராமம் , நகரம்
C) ஊர் , நாடு, நகரம்
D) ஊர் ,நகரம், நாடு

15. கீழ்க்கண்டவற்றில் சொல்லும், பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?

A) மறம். – வீரம்
B) சமர். – போர்
C) எக்களிப்பு – சிறு மகிழ்ச்சி
D) கலம். – கப்பல்

16. பொருத்துக

a. தொடக்கப்பள்ளி. — 1. ESCALATOR
b. மேல்நிலைப்பள்ளி. — 2. LIFT
c. மின் படிக்கட்டு. — 3. PRIMARY SCHOOL
d. மின்தூக்கி. — 4. HIGHER SECONDARY SCHOOL

| | (a) | (b). | (c). | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

17. நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியை தொடுவதால் பிறக்கும் எழுத்து என்ன?

A) ன
B) ண
C) ந.
D) ல

18. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

A) செக். – காசோலை
B) டிமாண்ட் டிராப்ட் – வரைவோலை
C) டெபிட் கார்டு. – கடன் அட்டை
D) ஈ – காமர்ஸ். – மின்னணு வணிகம்

19. கீழ்கண்டவற்றுள் சொல்லும் பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?

A) மல்லெடுத்த. – செழுமை பெற்ற
B) நல்கும். – தரும்
C) கழனி – வயல்
D) ஆழி. – கடல்

20. கீழ்க்கண்டவற்றுள் தமிழர்களைப் பற்றி முடியரசன் கூறும் கருத்துக்களில் தவறானது எது?

A) பழந்தமிழன் ஆழமான கடல்களை கடந்து பயணம் செய்தான்
B) அச்சம் தரும் போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான் தமிழன்

C) ஆழ் கடலில் மூழ்கி முத்தெடுத்தான் தமிழன்
D) வடநாட்டில் தன் வெற்றி கொடியை நாட்டினான் தமிழன்

21. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதுஇல்லார் – இதில் வெறுக்கை என்ற சொல்லின் பொருள் என்ன?
A) ஊக்க மிகுதி B) சிறப்பு C) செல்வது. D) மேன்மை

22. கீழ்கண்டவற்றுள் சொல்லும், பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?
A) நிருமித்த. – உருவாக்கிய B) விளைவு – நிகழ்வது
C) சமூகம் – மக்கள் குழு D) அசதி – சோர்வு

23. நிலவு + என்று என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்
A) நிலயென்று. B) நிலவென்று
C) நிலவன்று. D) நிலவு என்று

24. கீழ்க்கண்டவற்றுள் சொல்லும், பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?
A) ஆழிப்பெருக்கு. – கடல் கோள்
B) மேதினி. – உலகம்
C) ஊழி. – நிலையற்ற காலப்பகுதி
D) உள்ளப்பூட்டு – உள்ளத்தின் அறியாமை

25. கீழ்கண்ட கூற்றுக்களை ஆராய்க
கூற்று 1 : நாவின் நுனி மேல் நோக்கி நேராக வருடுவதால் ழகரம் தோன்றும்
கூற்று 2 : ளகரமும் , ழகரமும் ஒரே தன்மையில் ஒலிக்கப்படும்
A) கூற்று 1,2 சரி B) கூற்று 1,2 தவறு
C) கூற்று 1 சரி , கூற்று 2 தவறு D) கூற்று 1 தவறு , கூற்று 2 சரி

26. ண என்ற எழுத்து
A) நாவின் அடி மேல்வாய் அண்ணத்தின் முன்பகுதியை தொடுவதால் பிறக்கிறது
B) நாவின் நடு மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியை தொடுவதால் பிறக்கிறது
C) நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியை தொடுவதால் பிறக்கிறது
D) நாவின் அடி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியை தொடுவதால் பிறக்கிறது

27. கீழ்கண்டவற்றுள் தவறானது எது?
A) செந்தமிழ். – செம்மை + தமிழ்
B) பொய்யகற்றும். – பொய்+ யகற்றும்
C) பாட்டிருக்கும். – பாட்டு + இருக்கும்
D) எட்டுத்திசை. – எட்டு + திசை

28. கீழ்க்கண்டவற்றுள் மா என்ற சொல் தரும் பொருள்களில் தவறானது எது?
A) துகள். B) தன்மை C) அறிவு. D) அழைத்தல்

29. கீழ்கண்டவற்றுள் மா என்ற சொல் தரும் பொருள்களில் தவறானது எது?
A) மரம். B) விலங்கு C) அரிய. D) அழகு

30. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
A) தேடும் பொறி – SEARCH ENGINE
B) தொடுதிரை. – TOUCH SCREEN
C) குரல் தேடல். – VOICE SEARCH
D) இடஞ்சுழி. – ANTI CLOCK WISE

31. கீழ்க்கண்டவற்றுள் சொல்லும் பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?
A) நாமநீர் – அச்சம் தரும் கடல்
B) காணி – நில அளவை குறிக்கும் சொல்
C) மாடங்கள் – மாளிகையின் வெளி அடுக்குகள்
D) அளி – கருணை

32. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி எது?
A) துருவப்பகுதி. B) இமயமலை
C) இந்தியா. D)தமிழ்நாடு

33. இனிய ---------- இன்னாத கூறல். கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?
A) உளவாக. B) உளதாக C) உரிதாக. D) உளமாற

34. கீழ்கண்டவற்றுள் சொல்லும் , பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?
A) ஆக்கம் – செல்வம் B) அதர். – வழி
C) அசைவு. – சோம்புதல் D) உழை. – நிலை

35. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க
கூற்று 1 : ஒருவனுக்கு உள்ள செல்வம் என்பது ஊக்கமே. அந்த ஊக்கமாகிய செல்வம் இல்லாதவர், உருவத்தால் மக்கள் போல தோன்றினாலும் புல்லை போன்றவரே ஆவார்
கூற்று 2 : ஊக்கம் இல்லாதவர் இவ்வுலகில் யாம் வண்மை உடையேம் என்று தம்மை தான் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடைய மாட்டார்.
A) கூற்று 1,2 சரி B) கூற்று 1,2 தவறு
C) கூற்று 1 சரி , கூற்று 2 தவறு D) கூற்று 1 தவறு , கூற்று 2 சரி

36. சிதைவிடத்து ஒல்கார் ------------- புதை அம்பின் பட்டுப்பாடு ஊன்றும் களிறு. கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?

A) ஆயினும். B) உரவோர் C) மற்றது. D) உடையான்

37. பொருத்துக

a) கூரை. 1. வீட்டின் கூரை
b) கூறை. 2. புடவை
c) ஏறி 3. குளம் d) ஏரி 4. மேலே ஏறி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 2 | 4 | 3 |

38. விலை , விளை, விழை இதன் பொருள் தருக

A) பொருளின் மதிப்பு, உண்டாக்குதல், விரும்பு
B) உண்டாக்குதல், விரும்பு, பொருளின் மதிப்பு
C) பொருளின் மதிப்பு ,விரும்பு, உண்டாக்குதல்
D) உண்டாக்குதல், பொருளின் மதிப்பு, விரும்பு

39. சிரம் என்பது

A) தலை. B) தளை C) தழை. D) தாழை

40. உலக சதுரங்க வீரரை வெற்றி கொண்ட மீத்திறன் கணினியின் பெயர்

A) டீப் புளூ. B) டீப் குளு C) டீப் மளூ. D) டீப் தளு

41. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

A) நின்றிருந்த. – நின்று + இருந்த
B) அவ்வுருவம். – அ + வுருவம்
C) மருத்துவத்துறை. – மருத்துவம் + துறை
D) செயலிழக்க. – செயல் + இழக்க

42. கீழ்கண்டவற்றுள் சொல்லும் , பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?

A) தகிரி. – ஆணைச் சக்கரம் B) கொங்கு. – மகரந்தம்
C) இயன்றவரை. – முடிந்தவரை D) ஔடதம் – மருந்து

43. உள்ளம் இல்லாதவர் ------------ உலகத்து. கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?

A) எய்தார். B) மற்றது C) நிலையாக. D) செல்லும்

44. சிறப்பு + உடையார் என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்

A) சிறப்புஉடையார். B) சிறப்புடையார்
C) சிறப்படையார். D) சிறப்பிடையார்

45. நாம் -------- சொல்படி நடக்க வேண்டும். கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?
A) சான்றோர். B) நல்லோர் C) மூத்தோர். D) வழிப்போக்கர்

46. கீழ்கண்டவைகளை ஆராய்க
a) பசியின்றி. – பசி + இன்றி
b) படிப்பறிவு. – படிப்பு + அறிவு
c) விரிவடைந்த. – விரிவ்+ அடைந்த
d) கண்ணுறங்கு. – கண் + உறங்கு
A) d மட்டும் தவறு B) a, c தவறு
C) b, d மட்டும் தவறு D) c, d தவறு

47. கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க
கூற்று 1 : ட என்னும் எழுத்துக்கு முன் 'ன்' வரும்
கூற்று 2 : ற என்னும் எழுத்துக்கு முன் 'ண்' வரும்
A) கூற்று 1,2 சரி B) கூற்று 1,2 தவறு
C) கூற்று 1 சரி , கூற்று 2 தவறு D) கூற்று 1 தவறு , கூற்று 2 சரி

48. கீழ்கண்டவற்றுள் சொல்லும் , பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?
A) களிறு. – யானை B) புதை – அம்பு
C) சிதைவிடத்து – புண்பட்டு D) வள்ளியம் – வள்ளல் தன்மை

49. எது நிலைப்பேறு இல்லாமல் நீங்கிவிடும் என திருக்குறள் குறிப்பிடுகிறது?
A) ஊக்கமுடைமை. B) பொருளுடைமை
C) பண்புடைமை. D)அருளுடைமை

50. கீழ்க்கண்டவற்றுள் ஊக்கத்தின் அளவிற்கு திருக்குறள் குறிப்பிடும் உவமை எது?
A) நீர் பூக்களின் அடிக்காம்பின் நீளம் B) புலியை யானை வீழ்த்துவது
C) மனம் தளராமல் இருப்பது D) யானை வீரர்களை வீழ்த்துவது

51. கீழ்க்கண்டவைகளை ஆராய்க
a) நிலவு + என்று. – நிலவன்று
b) தமிழ் + எங்கள். – தமிழேங்கள்
c) அமுது+ என்று. – அமுதென்று
d) செம்மை+ பயிர். – செம்பயிர்
A) a மட்டும் தவறு B) a, c தவறு

C) a, d மட்டும் தவறு D) a, b தவறு

52. பாகற்காய் என்பதை பிரித்து எழுதுக
A) பாக + அல் + காய் B) பா+ கற்+ காய்
C) பாகு +அல் + காய் D) பாக + அற் + காய்

53. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" இந்த வரிகளை பாடியவர் யார்?
A) கண்ணதாசன். B) பாரதியார்
C) பாரதிதாசன். D) வாணிதாசன்

54. கீழ்க்கண்டவற்றுள் சொல்லும் , பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?
A) கொங்கு – மகரந்தம்
B) அலர் – மலர்தல்
C) பொற்கோட்டு – பொன்மயமான உயரத்தில்
D) மேரு – இமயமலை

55. சித்தம் என்பதன் பொருள் என்ன ?
A) மணம். B) மனம் C) குணம். D) வனம்

56. கீழ்க்கண்டவற்றை ஆராய்க
a) வேதியுரங்கள். – வேதி + உரங்கள்
b) தரையிறங்கும். – தரை + யறங்கும்
c) வழித்தடம். – வழி + தடம்
d) தட்ப வெப்பம். – தட்ப + வெப்பம்
A) a, c, d சரி B) a, b, c சரி
C) a, d சரி D) a, c சரி.

57. பொருத்துக
a) CONTINENT. - 1. வானிலை
b) MIGRATION. - 2. புகலிடம்
c) SANCTUARY. - 3. வலசை
d) WEATHER. - 4. கண்டம்

| | (a). | (b). | (c). | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

58. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

A) SATELLITE. - செயற்கைக்கோள்
B) ARTIFICIAL INTELLIGENCE. - செயற்கை நுண்ணறிவு
C) SONIC COMPUTER. - மீத்திறன் கணினி
D) WHATSAPP. - புலனம்.

59. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் தருக
A) சேர்த்தல் B) அழித்தல் C) போக்குதல். D) தள்ளுதல்.

60. ஏற்றத்தாழ்வற்ற ---------- அமைய வேண்டும். கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?
A) சமூகம். B) நாடு C) வீடு. D) தெரு.

61. அஃறிணை பிரித்து எழுதுக
A) அ + றிணை. B) அ + திணை
C) அல் + திணை D) அஃ + றிணை.

62. கீழ்க்கண்டவற்றை ஆராய்க
a) பொங்கலன்று. – பொங்க + லன்று
b) போகிப்பண்டிகை – போகி + பண்டிகை
c) சிலப்பதிகாரம் – சிலப்பு + அதிகாரம்
d) கணினிதமிழ். – கணினி + தமிழ்
A) a, c தவறு B) c, d தவறு
C) a, b, c தவறு D) a, c, d தவறு.

63. கழுத்தில் சூடுவது
A) தார் B) கணையாழி C) தண்டை D) மேகலை.

64. விண்வெளி என்ற சொல்லில் பயின்று வரும் புணர்ச்சி எது?
A) விகார புணர்ச்சி. B) இயல்பு புணர்ச்சி
C) திரிதல் விகாரம். D) தோன்றல் விகாரம்.

65. புத்தரின் வரலாற்றை கூறும் நூல்
A) ஜீவஜோதி. B) ஆசிய ஜோதி C) நவஜோதி. D) ஜீவன் ஜோதி

66. . கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம் ------------------
A) குழந்தைகளை பாதுகாப்போம் B) குழந்தைகளை நேசிப்போம்
B) குழந்தைகளை வளர்ப்போம் D) குழந்தைகளை அரவணைப்போம்.

67. கீழ்க்கண்ட கலைச்சொற்களை ஆராய்க
a) LORRY. - பேருந்து

b) HUMANITY. - மனிதநேயம்
c) MERCY. - கருணை
d) SENIOR RED CROSS. - இளம் செஞ்சிலுவை சங்கம்

A) a, d தவறு
B) a, c, d தவறு
C) a ,b தவறு
D) d மட்டும் தவறு.

68. எதிர் + ஒலிக்க என்பதை சேர்த்து எழுத கிடைக்கும் சொல் எது

A) எதிரலிக்க.
B) எதிர்ஒலிக்க
C) எதிரொலிக்க.
D) எதிர்ரொலிக்க.

69. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்

A) கோவை.
B) மதுரை
C) தஞ்சாவூர்
D) சிதம்பரம்.

70. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது

A) ART GALLERY. - கலைக்கூடம்
B) LITERATURE. - இலக்கியம்
C) SATRIOTISM. - நாட்டுப்பற்று
D) KNOWLEDGE OF REALITY - மெய்யுணர்வு

71. வாழ்வின் உயர கடினமாக ---------- வேண்டும். கோடிட்ட இடத்தில் வரும் வார்த்தை என்ன?

A) துன்பம்.
B) உழைக்க
C) பேச.
D) கவனம்.

72. மணிமேகலை கையில் இருந்த அமுத சுரபியில் உணவு இட்ட பெண்

A) சித்திரை.
B) ஆதிரை
C) காய சண்டிகை.
D) தீவதிலகை.

73. கீழ்கண்டவற்றை ஆராய்க

a) கைப்பொருள். – கை + பொருள்
b) மானமில்லா. – மானம் + இல்லா
c) அறிவுஉடைமை. – அறிவு + உடைமை
d) நன்றியறிதல் – நன்றி + அறிதல்

A) a, b, d சரி
B) a, c, d சரி
C) a, b, c சரி
D) அனைத்தும் சரி.

74. கீழ்க்கண்டவற்றுள் சொல்லும் , பொருளும் தவறாக பொருந்தி உள்ளது எது?

a) ஆசார கோவை – நல்ல அறங்களின் தொகுப்பு
b) முதுரை. – முதியோர் கூறும் அறிவுரை
c) இழைத்து. – செதுக்கி
d) பண். – பாடல்

A) a, c, d தவறு B) a, c தவறு
C) c, d தவறு D) அனைத்தும் தவறு.

75. தேசம் உடுத்திய நூலாடை என கவிஞர் தாராபாரதி குறிப்பிடும் நூல் எது?
A) திருவாசகம். B) திருக்குறள்
C) திரிகடுகம். D) திருப்பாவை.

76. கூற்று: நில அமைப்பில் காணப்படும் பன்முகத்தன்மை அப்பகுதியில் வளரும் தாவரங்கள் மற்றும் விலங்குகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
காரணம்: ஒரு பகுதியின் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வளம் என்பது அப்பகுதியில் நிலவும் இயற்கை மற்றும் காலநிலையை பொறுத்து மாறுபடுகின்றது.
A) கூற்று சரி காரணம் தவறு B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி D) கூற்று காரணம் இரண்டும் தவறு

77. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?
1. மேகலயாவில் உள்ள மௌசின்ராம் அதிக மழை பொழியும் பகுதி ஆகும்.
2. குறைவான மழை பொழியும் பகுதியான ஜெய்சால்மர் உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் அமைந்துள்ளது.
A) 1 மட்டும் தவறு B) 2 மட்டும் தவறு
C) இரண்டும் தவறு D) இரண்டும் சரி

78. பொருத்துக (மொழிகள்– செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு)
A. தமிழ் – 1. 2008
B. கன்னடம் – 2. 2004
C. சமஸ்கிருதம் – 3. 2016
D. மலையாளம் – 4. 2005
E. ஒரியா– - 5. 2013
A) 54321 B) 23451
C) 34521 D) 21453

79. எந்த ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்திய 122 முக்கிய மொழிகளையும், 1599 பிற மொழிகளையும் கொண்டுள்ளது?
A) 2000 B) 2001
C) 2010 D) 2011

80. கீழ்கண்டவற்றுள் தவறாக பொருந்தியுள்ள இணை எது? (இந்தியாவில் பேசப்படும் முதல் ஐந்து மொழிகள்)
1. இந்தி–43.63%
2. வங்காளம்–8.30%

3. மராத்தி–6.93%
4. தமிழ்–5.89%
5. தெலுங்கு–7.09%

A) 2,3
B) 3,4
C) 4 மட்டும்
D) 3,5

81. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?
1. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" உள்ள நாடாக விளங்குகிறது.
2. வேற்றுமையில் ஒற்றுமை என்ற சொற்றொடரானது நமது சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் டிஸ்கவரி ஆஃப் இந்தியா என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.
3. இந்திய தொல்லியல் துறை இதுவரை கண்டுபிடித்த கல்வெட்டுச் சான்றுகளில் 70 சதவீதம் தமிழ்நாட்டில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டவை.

A) அனைத்தும் சரி
B) 1,2 சரி
C) 2,3 சரி
D) 1,3 சரி

82. பொருத்துக.
1. கேரளா – பாங்க்ரா
2. பஞ்சாப் – மோகினியாட்டம்
3. குஜராத் – கல்பேலியா
4. ராஜஸ்தான் – கார்பா

A) 4321
B) 2341
C) 2143
D) 3241

83. சரியான வரிசையை தேர்ந்தெடுக்கவும்.
அசாம் ,உத்தரகண்ட், உத்திரப்பிரதேசம் ,ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கான புகழ்பெற்ற நடனங்களை வரிசைப்படுத்துக.

A) தாண்டியா ,கூமர், ராசலீலா, சோலியா, பிஹு
B) தாண்டியா ,கூமர், சோலியா, பிஹு, ராசலீலா
C) சோலியா, கூமர், தாண்டியா, பிஹு, ராசலீலா
D) பிஜு, சோலியா, ராசலீலா ,கூமர் தாண்டியா

84. இந்தியாவில் பல்வேறு இன மக்கள் காணப்படுவதால் இந்தியாவை "இனங்களின் அருங்காட்சியகம்" என கூறியவர் யார்?

A) ஜான் வீலர்
B) மார்ட்டின் லூதர்
C) வி.ஏ.ஸ்மித்
D) ஜான் மார்ட்டின்

85. கூற்று: இந்தியாவில் ஆங்கிலம் ஒரு முக்கிய மொழியாக எழுச்சி பெற்று பள்ளிகள், கல்லூரிகளில் பயிற்று மொழியாகவும் ,அலுவலக மொழியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

காரணம் :1947 இல் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் ஏறத்தாழ 200 ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தது.

A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி
D) கூற்று காரணம் இரண்டும் தவறு

86. விராலிமலையில் உள்ள மயில்களுக்கான சரணாலயம் தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A) சிவகங்கை
B) புதுக்கோட்டை
C) தேனி
D) மதுரை

87. கூற்று: 2525 கிலோமீட்டர் தொலைவிற்கு பாயும் இந்தியாவின் நீளமான நதி கங்கை.
காரணம்: பிரம்மபுத்திரா 3848 கிலோமீட்டர் நீளமுடையது என்றாலும் அது இந்தியாவில் பாயும் தொலைவு குறைவு.

A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி
D) கூற்று காரணம் இரண்டும் தவறு

88. பொருத்துக (தேசிய சின்னங்கள்– ஆண்டு)

1. ஆலமரம் – 1973
2. மயில் – 1950
3. புலி – 1963
4. கங்கை ஆறு – 2010
5. யானை – 2008

A) 54321
B) 23154
C) 32415
D) 23541

89. கீழ்கண்டவற்றுள் தவறான இணை எது? (தேசிய சின்னங்கள்– ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு)

1. ஆற்று ஓங்கில்–2010
2. லாக்டோ பேசில்லஸ் –2011
3. மாம்பழம் –1950

A) 1 மட்டும் தவறு
B) 2 மட்டும் தவறு
C) 3 மட்டும் தவறு
D) மேற்கூறிய எதுவும் இல்லை

90. கீழ்க்கண்ட கூற்றுக்களில் தவறானதை தேர்ந்தெடுக்கவும்.

A) இந்திய தேசியக் கொடியை ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கையா என்பவர் வடிவமைத்தார்.
B) விடுதலை இந்தியாவின் முதல் தேசியக்கொடி தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தில் (வேலூர் மாவட்டம் ) நெய்யப்பட்டது.
C) தேசிய கொடியின் நீள அகலம் 4:3 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது

D) இந்தியாவின் முதல் தேசிய கொடியை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ( 15.08. 1947) செங்கோட்டையில் ஏற்றினார்.

91. பொருத்துக.
1. தேசிய பாடல் – பிதிமாரி வெங்கட சுப்பாராவ்
2. தேசிய உறுதிமொழி – பங்கிம் சந்திர சட்டர்ஜி
3. தேசிய நாட்காட்டி – இரவீந்திரநாத் தாகூர்
4. தேசிய கீதம் – மேக்னாத் சாகா
A) 4321 B) 2341
C) 3214 D) 2143

92. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?
1. சாரணாத் அசோகத் துணின் உச்சியில் அமைந்திருக்கும் நான்முகச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினையாக ஜனவரி 26, 1950 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. "ஜன கண மன " எனும் பாடல் ஜனவரி 25 ,1950ல் இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
3. 1911, டிசம்பர் 27ஆம் நாள் லாகூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது தேசிய கீதம் முதன் முதலாக பாடப்பட்டது.
A) 1,2 தவறு B) 2,3 தவறு
C) 1,3 தவறு D) அனைத்தும் தவறு

93. காந்தியின் பிறந்த நாளை "சர்வதேச அகிம்சை நாளாக" ஐநா சபை அங்கீகரித்த ஆண்டு எது?
A) 2005 B) 2006
C) 2007 D) 2009

94. கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க.
1. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது வந்தே மாதரம் பாடலை பாடியவர் ரவீந்திரநாத் தாகூர்.
2. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி .உதயகுமார் ஆவார்.
3. சக ஆண்டு முறையை துவக்கியவர் கனிஷ்கர்
4. தேசிய கீதத்தை 52 வினாடிகளில் பாடி முடிக்க வேண்டும்.
A) அனைத்தும் சரி B) 1,2,3 சரி
C) 2,3 மட்டும் தவறு D) 1,3,4 சரி

95. கீழ்க்கண்ட கூற்றுகளுக்கு பொருத்தமானதை தேர்ந்தெடுக்கவும்.
1. இந்திய விடுதலை நாளில் பறக்க விடப்பட்ட முதல் தேசியக்கொடி----- அருங்காட்சியகத்தில் உள்ளது.

2. நான்முகச் சிங்கம் தற்போது––––அருங்காட்சியகத்தில் உள்ளது.

A) கொல்கத்தா, சாரநாத்
B) சென்னை கோட்டை, கொல்கத்தா
C) டெல்லி, புனித ஜார்ஜ் கோட்டை
D) புனித ஜார்ஜ் கோட்டை,சாரநாத்

96. பொருத்துக ( தேசிய இலச்சினையின் அடிப்பகுதி)

1. யானை – ஆற்றல்
2. குதிரை – கம்பீரம்
3. காளை – வேகம்
4. சிங்கம் – கடின உழைப்பு

A) 1234
B) 1342
C) 2341
D) 2314

97. கீழ்கண்ட கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடுக்கவும்?

1. விடுதலை நாளின் போது பிரதம அமைச்சர் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவார்.
2. இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவரே குடியரசு நாளில் செங்கோட்டையில் கொடியேற்றுவார்.
3. இந்திய குடியரசு நாளின் இரண்டாவது நாளான ஜனவரி 28, அன்று பாசறைக்கு திரும்புதல் என்ற விழா சிறப்பாக நடைபெறும்.

A) அனைத்தும் சரி
B) 1,2 சரி
C) 2,3 சரி
D) 1,3 சரி

98. பொருந்திய பின் பொருந்தாதது எது?

1. தேசிய ஊர்வன –புலி
2. தேசிய நீர் வாழ் விலங்கு– லாக்டோபேசில்லஸ்
3. தேசிய பாரம்பரிய விலங்கு –ராஜ நாகம்
4. தேசிய நுண்ணுயிரி– டால்பின்

A) தேசிய ஊர்வன –ராஜநாகம்
B) தேசிய நீர்வாழ் விலங்கு– டால்பின்
C) தேசிய பாரம்பரிய விலங்கு– புலி
D) தேசிய நுண்ணுயிரி– லாக்டோபேசில்லஸ்

99. கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க.

1. 1529 இல் விஸ்வநாதர் மதுரை நாயக்கர் ஆனார்.
2. மதுரை நாயக்கரால் தனது மாகாணங்களில் அதிகாரங்களை பெற விரும்பிய சிறுகுடித் தலைவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை.
3. மதுரை நாயக்கர் அவரது அமைச்சர் அரியநாதர் உடன் கலந்தாலோசித்த 1530 இல் பாளையக்காரர் முறையை ஏற்படுத்தினார்.
4. அதன் மூலம் நாடு 72 பாளையங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் ஒவ்வொரு பாளையக்காரரின் கீழ் கொண்டுவரப்பட்டது.

A) அனைத்தும் சரி
B) 1,3,4 சரி
C) 2,3 மட்டும் சரி
D) 3 மட்டும் தவறு

100. மேற்கு பாளையங்களில் இருந்த மறவர்கள் யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர்?
A) கட்டபொம்மன்
B) பூலித்தேவர்
C) மருது சகோதரர்கள்
D) யூசுப்கான்

101. பொருத்துக.
1. டெல்லி– கன்வர் சிங்
2. கான்பூர்– கான் பகதூர் கான்
3. ஜான்சி– நானா சாகிப்
4. பரெய்லி– லட்சுமிபாய்
5. பீகார் –இரண்டாம் பகதூர்ஷா
A) 53421
B) 54321
C) 53412
D) 54312

102. புலி தேவர் பற்றிய கூற்றுக்களை ஆராய்க.
1. திருநெல்வேலியின் அருகில் இருந்த நெற்கட்டும் செவல் என்ற பாளையத்தின் பாளையக்காரர்.
2. இந்தியாவில் ஆங்கிலேயருடன் போரிட்டு அவர்களை தோற்கடித்த முதல் இந்திய மன்னர்.
3. 1759 இல் ஆற்காடு நவாப்பின் படைகள் நெற்கட்டும்செவ்வலைக் கைப்பற்றியது.
4. பூலித்தேவர் 1764 இல் நெற்கட்டும்செவ்வலை மீண்டும் கைப்பற்றினார்.
A) அனைத்தும் சரி
B) 1,2,3 சரி
C) 3,4 சரி
D) 1,2,4 சரி

103. ஆற்காடு நவாபின் யூசுப்கான் தலைமையிலான படை பூலித்தேவரை எங்கு தோற்கடித்தது?
A) நெற்கட்டும் செவல்
B) அந்தநல்லூர்
C) திருநெல்வேலி
D) பாஞ்சாலங்குறிச்சி

104. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடுக்கவும்.
1. இராமநாதபுர கலெக்டர் காலின் ஜாக்சன் 1798 ல் நிலுவைத் தொகையை செலுத்த சொல்லி கட்டபொம்மனுக்கு கடிதங்கள் எழுதினார்.
2. 1798ல் கட்டபொம்மன் தனது அமைச்சர் சிவப்பிரமணியத்துடன் இராமநாதபுரத்தில் கலெக்டரை சந்தித்தார்.

3. சென்னை கவுன்சிலிங் கவர்னர் வில்லியம் பெண்டிங் கலெக்டர் ஜாக்சனின் தவறான அணுகுமுறைக்காக பதவி நீக்கம் செய்தும் ,சிவசுப்பிரமணியத்தை விடுதலை செய்யவும் உத்தரவிட்டார்.

A) 1,2 தவறு
B) 1 மட்டும் தவறு
C) 3 மட்டும் தவறு
D) 2,3 தவறு

105. களப்பூர் காடுகளில் மறைந்திருந்த கட்டபொம்மனை கைது செய்து கம்பெனியிடம் ஒப்படைத்தவர் யார்?

A) புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான்
B) சிவகங்கை ராஜா தொண்டைமான் இளந்திரையன்
C) செவத்தையா
D) கோபால நாயக்கர்

106. பொருத்துக

1. சிவசுப்பிரமணியம் – கயத்தாறு
2. கட்டபொம்மன் – நாகலாபுரம்
3. தீரன் சின்னமலை – பாஞ்சாலங்குறிச்சி
4. ஊமைத்துறை – சங்ககிரி

A) 4321
B) 2143
C) 2134
D) 3214

107. கம்பெனி சிவகங்கை க்கு எதிராக போர் புரிந்ததற்கான காரணங்கள் எவை?

1. சிவகங்கை வியாபாரிகள் தங்களது உள்நாட்டுக் கொள்கையில் கம்பெனியின் தலையீட்டை விரும்பவில்லை.

2. கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின் அவரது சகோதரர் ஊமைத்துரைக்கும் மற்றவர்களுக்கும் மருது சகோதரர்கள் பாதுகாப்பு அளித்தது.

A) 1 மட்டும்
B) 2 மட்டும்
C) இரண்டும்
D) இரண்டும் இல்லை

108. கூற்று:ஜூன் 1801 இல் மருது சகோதரர்கள் 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' என்று அழைக்கப்பட்ட 'சுதந்திர பிரகடனம்' ஒன்றை வெளியிட்டனர்.
காரணம் :ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பாக இருந்தது.

A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
D) கூற்று காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது

109. கீழ்கண்ட கூற்றுகளில் தவறானது எது?

A) கிளர்ச்சி தோல்வியுற்றதால்,1801 இல் சிவகங்கையை ஆங்கிலேயர்கள் இணைத்துக் கொண்டனர்.
B) 1801 அக்டோபர் 24ஆம் நாள் மருது சகோதரர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்.
C) 1801 நவம்பர் 16ஆம் நாள் செவத்தையா கைது செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டார்
D) 70 கிளர்ச்சியாளர்கள் மலாயாவின் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டனர்.

110. தீரன் சின்னமலை பற்றிய கூற்றுக்களை ஆராய்க.
1. தீரன் சின்னமலை பிரஞ்சு ராணுவத்தின் நவீன போர் முறை பயிற்சி பெற்றிருந்தார்.
2. இவர் திப்புசுல்தான் பக்கம் இருந்து ஆங்கிலேயருக்கு எதிராக போராடி வெற்றி பெற்றார்.
3. ஆங்கில படைகளிடமிருந்து தப்பித்து சின்னமலை காவேரி ,ஓடாநிலை மற்றும் அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கொரில்லா போர் முறையில் ஆங்கில படைகளை தோற்கடித்தார்.
4. இறுதிப் போரின் போது சின்னமலை தனது சமையல்காரர் நல்லப்பன் என்பவரால் காட்டி கொடுக்கப்பட்டதால் 1804 இல் தூக்கிலிடப்பட்டார்.

A) 1 ,2 மட்டும் தவறு
B) 1,2,4 சரி
C) 4 மட்டும் தவறு
D) 1,3,4 சரி

111. வேலூர் கழகத்தின் விளைவுகள் எவை?
1. புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
2. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரில் இருந்து கொல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
3. வில்லியம் காவெண்டிஷ்பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார்.
4. சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல் ,காதுகளில் வளையம் அணிதல் ஆகியன ஏற்றுக் கொள்ளப்பட்டது.

A) அனைத்தும்
B) 1,2,4
C) 1,2,3
D) 1,3,4

112. 1806-ல் நடந்த வேலூர் கழகத்தை 1857-ல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின் முன்னோடி என்று கூறியவர் யார்?

A) வி. ஏ.ஸ்மித்
B) V.D. சவார்க்கர்
C) ஆடம் ஸ்மித்
D) ஆல்பர்ட் மார்ட்டின்

113. 1857 ஆண்டு புரட்சிக்கான உடனடி காரணம் என்ன?
A) ஆங்கிலேயரின் பொருளாதார ரீதியான சுரண்டல் கொள்கை
B) வாரிசு இழப்புக் கொள்கை

C) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்
D) இராணுவ பதவி உயர்வுகள் அனைத்தும் இந்திய வீரர்களுக்கு மறுக்கப்பட்டது

114. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சி பற்றிய கூற்றுக்களை ஆராய்க.
1. கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு புரட்சியை அடக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தார்.
2. அவர் சொந்த முயற்சியால் சீனாவில் இருந்து ஆங்கிலப்படைகளை கல்கத்தாவிற்கு வரவழைத்தார்.
3. 1857 அக்டோபர் 20 இல் படைத்தளபதி நிக்கல்சனால் டெல்லி மீண்டும் கைப்பற்றப்பட்டது.
4. இரண்டாம் பகதூர்ஷா ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டு 1861 இல் இறந்தார்.

A) 1,2 சரி B) 2,3 சரி
C) 3 மட்டும் தவறு D) 3,4 சரி

115. பெரும் புரட்சியின் தோல்விக்கான காரணங்களில் தவறானது எது?
A) நவீன கல்வி கற்ற இந்தியர்கள் ஆங்கில ஆட்சி மட்டுமே இந்திய சமுதாயத்தை சீர்திருத்தி நவீனப்படுத்த முடியும் என நம்பியதால் அவர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை
B) சீக்கியர்கள் ஆப்கானியர்கள் மற்றும் கூர்கா படைப்பிரிவினர் ஆகியோர்களின் விசுவாசத்தை ஆங்கிலேயர் பெற்றனர்.
C) வங்காளம், பம்பாய், சென்னை மேற்கு பஞ்சாப் மற்றும் ராஜபுதனம் ஆகிய பகுதிகள் புரட்சியில் கலந்து கொண்டனர்.
D) ஆங்கிலேயர்கள் சிறந்த ஆயுதங்கள் ,சிறந்த தளபதிகள் மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பை கொண்டிருந்தனர்.

116. தவறான இணையை தேர்ந்தெடுக்கவும்.
A) மருதுபாண்டியர்– எட்டயபுரம் B) கோபால நாயக்கர்– திண்டுக்கல்
C) கேரளவர்மன் –மலபார் D) துண்டாஜி– மைசூர்

117. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?
A) வேலு நாச்சியார் தமிழர்களால் வீரமங்கை எனவும் தென்னிந்தியாவின் ஜான்சி ராணி எனவும் அறியப்பட்டார்.
B) மருது சகோதரர்கள் "சிவகங்கையின் சிங்கம்" என அழைக்கப்பட்டனர்.
C) 1857 ஆம் ஆண்டு புரட்சியை வரலாற்று ஆசிரியர் ஆடம் ஸ்மித் என்பவர் 'முதல் இந்திய சுதந்திரப் போர் 'என விவரிக்கிறார்.
D) கிழக்கு பாளையங்கள் கட்டபொம்மனின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

118. கூற்று : புவியியலாளர்கள் இந்தியாவை ஆசியாவின் இத்தாலி என்று அழைக்கின்றனர்.
காரணம்: ஐரோப்பாவில் உள்ள இத்தாலி ஒரு தீபகற்ப நாடாகும்.

A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி
D) கூற்று காரணம் இரண்டும் தவறு

119. பொருத்துக.
1. இந்தோ ஆரிய இனம் – பீகார்
2. மங்கோலிய இனம் – சோட்டா நாக்பூர்
3. திராவிட இனம் – காஷ்மீர்
4. ஆரிய திராவிட இனம் – அஸ்ஸாம்
A) 3421
B) 3412
C) 4321
D) 4312

120. சமஸ்கிருதம் மற்றும் வட இந்திய மொழிகளை எழுத----என்னும் எழுத்து வடிவம் பயன்படுத்தப்படுகிறது.
A) பாலி
B) பிராமி
C) தேவநாகரி
D) சித்திர எழுத்து வடிவம்

121. கீழ்கண்ட கூற்றுகளில் தவறானது எது?
1.இந்தியா வடக்கு தெற்காக 3,214 கிலோமீட்டர் நீளமும் ,கிழக்கு மேற்காக 2933 கிலோமீட்டர் அகலமும் கொண்டுள்ளது.
2. வட இந்தியாவையும், தென்னிந்தியாவையும் லடாக் மலைத்தொடர்கள் பிரிக்கின்றன.
3. ஆங்கிலேயர்கள் நாடு முழுமைக்கும் பொதுவான ரயில் பாதை தபால் தந்தி துறையை ஏற்படுத்தி ஒற்றுமை உணர்வை வளர்த்தனர்.
A) 1 மட்டும் தவறு
B) 2 மட்டும் தவறு
C) 3 மட்டும் தவறு
D) மேற்கூறிய எதுவும் இல்லை

122. கீழ்கண்டவற்றுள் தவறாக பொருந்தியுள்ள இணை எது (அறுவடை திருவிழாக்கள்) ?
1. மத்திய பிரதேசம்– லொஹறி
2. பஞ்சாப் –போஹாலி பிஹு
3. அசாம்– பைசாகி
4. வங்காளம் –நபன்னா
A) 1,2
B) 3,4
C) 1,3
D) 2,3

123. கீழ்க்கண்டவற்றில் வட இந்திய கட்டிடக்கலைக்கு பொருந்தாதது எது?
A) காசி விஸ்வநாதர் கோயில்
B) வைகுந்த பெருமாள் கோயில்
C) வைஷ்ணவி தேவி கோயில்
D) கோனார்க் சூரியனார் கோயில்

124. கீழ்கண்ட கூற்றுக்களில் தவறானது எது?

1. லிட்டன் பிரபு எழுதிய The secret way என்ற நூலை தமிழில் 'இரகசிய வழி' என்ற பெயரில் வ .உ .சிதம்பரனார் மொழிபெயர்த்துள்ளார்.
2. இராஷ்டிரகூடர்கள் காலத்தில் கன்னட மொழியில் எழுதப்பட்ட கவிராஜமார்க்கம், விஜயநகர பேரரசு காலத்தில் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட 'ஆமுக்தாமால்யதா' போன்ற இலக்கியங்கள் அந்தந்த மொழிகளின் வளமையை கூறுகின்றன.

A) 1 மட்டும் தவறு
B) 2 மட்டும் தவறு
C) இரண்டும் தவறு
D) மேற்கூறிய எதுவும் இல்லை

125. கீழ்க்கண்டவற்றுள் தவறாக பொருந்தியுள்ள இணைகள் எத்தனை?
1. சோட்டா நாக்பூர் பீடபூமி –கனிம வளங்கள்
2. மாளவ பீடபூமி –எண்ணெய் வித்துக்கள்
3. தக்காண பீடபூமி– பருப்பு வகைகள்

A) 1 இணை
B) 2 இணைகள்
C) 3 இணைகள்
D) எதுவும் இல்லை

126. இந்தியாவில் நில சீர்திருத்தங்களுக்கான அவசியம் என்ன?
1. விவசாய நிலம் பிரிக்கப்பட்டது.
2. ஒரு நபருக்கான விதைக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு அதிகரித்து வருகிறது.
3. உற்பத்தி திறன் குறைந்து வருகிறது.

A) 1 மட்டும் சரி
B) 1,3 சரி
C) 1 மட்டும் தவறு
D) அனைத்தும் சரி

127. கூற்று:" வந்தே மாதரம் "என்பது போராட்டத்திற்கான முழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
காரணம் :வங்காளப் பிரிவினைக்கு எதிரான சுதேசி இயக்கத்தின் போது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரியானது . காரணம் கூற்றின் சரியான விளக்கமாகும்.
D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல

128. கீழ்க்காண்பனவற்றில் எது ஹெப்டா ஹைடிரேட் அல்ல?
1. பச்சை விட்டிரியால்
2. வெள்ளை விட்டிரியால்
3. நீல விட்டிரியால்
4. சிவப்பு விட்டிரியால்

A) 1,2 மட்டும்
B) 3 மட்டும்
C) 4 மட்டும்
D) 3,4 மட்டும்

129. பின்வரும் வாக்கியங்களை கவனமாக கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் 'குறைந்த மக்கள் தொகை' குறித்து சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுக்கவும்.

1. ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வளங்களும் மக்கள் தொகையும் சரியான விகிதத்தில் காணப்படுவது.
2. ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வளங்களை விட மக்கள் தொகை மிகுதியாக காணப்படுவது.
3. ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வளங்களை விட மக்கள் தொகை குறைந்து காணப்படுதல்

A) 1,2,3 சரி
B) 1 சரி 2,3 தவறு
C) 2 சரி 1,3 தவறு
D) 3 சரி 1,2 தவறு

130. அரசியல் கட்சிகள் அவைகள் உருவாக்கப்பட்ட வருடங்களுடன் பொருத்துக.

1. இந்திய தேசிய காங்கிரஸ்– 2013
2. அகில இந்தியா திரிணாமுல் காங்கிரஸ்– 1925
3. தேசிய மக்கள் கட்சி –1885
4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி– 1998

A) 2341
B) 3412
C) 3214
D) 1432

131.ரூ. 2500 அசலானது, 2.5% வட்டி வீதமும், ரூ. 187.50 தனிவட்டியாக எத்தனை ஆண்டுகளில் கிடைக்கும்?

A) 2
B) 3
C) 4
D) 5

Explanation :

- Given:
- P= ரூ. 2500
- r =2.5%
- SI= ரூ. 187.50
- n =?
- Solution:
- S.I=$\frac{pnr}{100}$
- 187.5=$\frac{2500\times n\times 2.5}{100}$
- n =$\frac{187.5}{25\times 2.5}$
- n =$\frac{1875}{25\times 25}$
- n=3

132. ஒரு தொகையானது 3 ஆண்டுகளில் 12% தனி வட்டி வீதம் ரூ.17,000 ஆக கிடைக்கிறது எனில் அசலை காண்க.

A) ரூ .14,000 B) ரூ.12,500

C) ரூ.15, 200 D) ரூ. 13 ,500

Explanation :

- Given:
- n =3
- r =12%
- A=17000
- P=?
- Solution:
- A=P+SI
- A=p+$\frac{pnr}{100}$
- A=p(1+$\frac{nr}{100}$)
- 17000=p(1+$\frac{12\times3}{100}$)
- 17000= p(1+$\frac{36}{100}$)
- 17000=p ($\frac{136}{100}$)
- P=$\frac{17000\times100}{136}$
- P=500× 25
- P=12500

133. ராம் என்பவர் மாதாமாதம் ரூ 200 வங்கியில் தொடர் வைப்புத் தொகை மூலம் செலுத்தி வந்தார் .6 வருட முடிவில் ₹19656 பெற்றுக் கொண்டார் எனில் வங்கி அவருக்கு அளித்த தனி வட்டி வீதத்தை காண்க.

A) 8% B) 10%

C) 12% D) 9%

Explanation :

- Given:
- P= ரூ 200(மாதாமாதம்)
- n =6 வருடம்=6× 12=72 மாதங்கள்
- P=72×200=14400
- A=19656
- r =?
- Solution:
- A=P+SI
- SI=A-P
- =19656-14400
- SI=5256
- S.I=$\frac{p\times n(n+1)\times r}{2\times12\times100}$
- 5256=$\frac{200\times72(72+1)\times r}{2\times12\times100}$

- $5256=\frac{200\times72(73)\times r}{2\times12\times100}$
- $r=\frac{5256}{73\times6}$
- r =12%

**134. ஆண்டிற்கு 5% வட்டி வீதத்தில் ஒரு ஆண்டிற்கு ரூ. 500 தனி வட்டியாக தரும் அசல் எவ்வளவு?**

A) 50,000 B) 30,000
C) 10,000 D) 5,000

Explanation :

- Given:
- n =1
- r =5%
- SI=500
- P=?
- Solution:
- $S.I=\frac{pnr}{100}$
- $500=\frac{p\times1\times5}{100}$
- $P=\frac{50000}{5}$
- P=10000

**135. அசல் ரூ. 46,000 ஆனது ஒரு ஆண்டு 9 மாத காலத்திற்குப் பிறகு தனிவட்டி மூலம் மொத்த தொகையாக ரூ.52,440 ஆக உயர்ந்தது எனில் வட்டி வீதம் காண்க.**

A) 5% B) 6%
C) 7% D) 8%

Explanation :

- Given:
- P=46000
- n =1 வருடம் 9 மாதம்$=1+\frac{9}{12}=1+\frac{3}{4}=\frac{7}{4}$
- A=52,440
- r=?
- Solution:
- A=P+SI
- SI=A-P
- =52440-46000
- SI=6440
- $S.I=\frac{pnr}{100}$
- $6440=\frac{46000\times\frac{7}{4}\times r}{100}$
- $r=\frac{6440\times4}{46\times7}$
- r =8%

136. ஒரு நபர் ஒவ்வொரு ஆண்டும் ₹500 பரிசு வழங்குவதற்காக ஆண்டுக்கு 10% என்ற முறையில் முதலீடு செய்ய ஒரு நிதியை உருவாக்க முடிவு செய்கிறார் எனில் ஆரம்பம் முதலீடு காண்க.

A) ரூ.4000
B) ரூ .5000
C) ரூ. 6000
D) ரூ.5500

Explanation :

- Given:
- n =1
- r =10%
- SI=500
- P=?
- Solution:
- S.I=$\frac{pnr}{100}$
- 500=$\frac{p\times1\times10}{100}$
- P=$\frac{50000}{10}$
- P=5000

137. மூன்றாண்டுகளில் 6% தனி வட்டி வீதம் மொத்த தொகை ரூ.11800 அளிக்கும் அசலை காண்க.

A) ரூ.8000
B) ரூ.9000
C) ரூ.10000
D) ரூ.9500

Explanation :

- Given:
- n =3
- r =6%
- A=11800
- P=?
- Solution:
- A=P+SI
- A=p+$\frac{pnr}{100}$
- A=p(1+$\frac{nr}{100}$)
- 11800=p(1+$\frac{6\times3}{100}$)
- 11800= p(1+$\frac{18}{100}$)
- 11800= p($\frac{118}{100}$)
- P=$\frac{11800\times100}{118}$
- P=10000

138. ஆண்டு வட்டி விகிதம் 2% வீதம் 3 ஆண்டுக்கு தனிவட்டி ரூ.300 கிடைக்கும் எனில் அசலை காண்க.

A) ரூ.5000 B) ரூ.3000
C) ரூ.2000 D) ரூ.1000

Explanation :

- Given
- n =3
- r =2%
- SI=300
- P=?
- Solution:
- S.I=$\frac{pnr}{100}$
- 300=$\frac{p\times3\times2}{100}$
- 300=$\frac{p\times6}{100}$
- P=30000/6
- P=5000

139. சதீஷ்குமார் என்பவர் ஒரு கடன் வழங்கும் நபரிடமிருந்து ரூ.52,000 ஐ ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் கடனாக பெற்றார் .4 ஆண்டுகள் கழித்து அவர் ரூ 79,040 மொத்த தொகையாக செலுத்தினார் எனில் வட்டி வீதம் காண்க.

A) 11% B) 12%
C) 13% D) 14%

Explanation :

- Given:
- P=52000
- n =4
- A=79040
- r =?
- Solution:
- SI=A-P
- =79040-52000
- SI=27040
- S.I=$\frac{pnr}{100}$
- 270400=$\frac{52000\times4\times r}{100}$
- r=$\frac{2704}{52\times4}$
- r=$\frac{676}{52}$
- r=13%

140. ஒரு குறிப்பிட்ட தொகையானது 15 வருடங்களில் இரட்டிப்பாவதற்கு எளிய வட்டி விகிதம் என்ன?

A) 6 1/3% B) 5 1/3 %
C) 5 2/3% D) 6 2/3%

Explanation :

- Given:

- n =15
- மடங்கு=2
- r =?
- Solution:
- r=$\frac{(மடங்கு-1)\times 100}{n}$
- r=$\frac{(2-1)\times 100}{15}$
- r=$\frac{100}{15}$
- r=$\frac{20}{3}$
- r=$6\frac{2}{3}$%

141. தனி வட்டியில் ஒரு தொகை 20 வருடத்தில் 3 மடங்கு ஆகிறது அதே தொகை அதே வட்டியில் எவ்வளவு காலத்தில் இரண்டு மடங்காகும்.

A) 8 வருடம் | B) 10 வருடம்
C) 12 வருடம் | D) 14 வருடம்

Explanation :

- Given:
- r =20
- மடங்கு=3
- n =?
- Solution:
- n=$\frac{(மடங்கு-1)\times 100}{r}$
- n=$\frac{(3-1)\times 100}{20}$
- n=$\frac{200}{20}$
- n=10 ஆண்டுகள்

142. விஜய் ரூ.10, 000 ஐ 5% வட்டி வீதத்தில் வைப்பு நிதியாக செலுத்துகிறார். எத்தனை ஆண்டுகளில் 11,000 ரூபாயை அவர் பெறுவார்.

A) 3 ஆண்டுகளில் | B) 2 ஆண்டுகளில்
C) 4 ஆண்டுகளில் | D) 1 ஆண்டில்

Explanation :

- given
- P=10000
- r =5%
- A=11000
- n=?
- solution
- A=P+SI
- SI=A-P
- =11000-10000
- SI=1000

- S.I=$\frac{pnr}{100}$
- 1000=$\frac{10000\times5\times n}{100}$
- N=10/5
- N=2 ஆண்டுகள்

143. Rs.5 $x^2y^2$ க்கு 4xy ஆண்டிற்கு 7y% வீதம் தனிவட்டி காண்க.

A) $\frac{7}{5}x^3y^4$ B) $\frac{7}{4}x^2y^3$
C) $\frac{4}{5}x^3y^2$ D) $\frac{4}{7}x^2y^4$

Explanation :

- Given
- P=5 $x^2y^2$
- n =4xy
- r =7y%
- SI=?
- Solution:
- S.I=$\frac{pnr}{100}$
- =$\frac{5\ x2y2\times4xy\times7y}{100}$
- SI=$\frac{7}{5}x^3y^4$

144. A ஆனவர் ஆண்டு ஒன்றுக்கு 14% வட்டி வீதத்தில் B க்கு ரூ.15,000-த்தை கடனாக கொடுக்கிறார். 6 ஆண்டுகளுக்குப் பின் B ஆனவர் A க்கு ரூ. 25,000 ஒரு கைக்கடிகாரமும் தருகிறார்கள் எனில் கைக்கடிகாரத்தின் விலை என்ன?

A) ரூ.2600 B) ரூ.1980
C) ரூ.1850 D) ரூ.1760

Explanation :

- GIVEN:
- P=15000
- n =6
- r =14%
- A=25000+ கைக்கடிகாரம்
- கைக்கடிகாரத்தின் விலை=?
- SOLUTION:
- S.I=$\frac{pnr}{100}$
- =$\frac{15000\times6\times14}{100}$
- SI=12600
- A=P+SI
- =15000+12600
- A=27600
- செலுத்த வேண்டிய தொகை=27600
- செலுத்திய தொகை=25000

- கைக்கடிகாரத்தின் விலை= செலுத்த வேண்டிய தொகை- செலுத்திய தொகை
- =27600-25000
- கைக்கடிகாரத்தின் விலை =2600

145. ரூபாய் 800 ஆனது 3 வருட தனிவட்டியில் மொத்தம் ரூ 920 ஆக மாறுகிறது. வட்டி விகிதம் 3 % அதிகரித்தால் கிடைக்கும் தொகை என்ன?

A) 990 B) 992
C) 1092 D) 892

Explanation :

- GIVEN:
- P=800
- n =3
- A=920
- வட்டி விகிதம் 3 % அதிகரித்தால் கிடைக்கும் தொகை=?
- SOLUTION:
- SI=A-P
- =920-800
- SI=120
- S.I=$\frac{pnr}{100}$
- 120=$\frac{800\times3\times r}{100}$
- SI=120/24
- SI=5%
- வட்டி 3% அதிகரித்தால்
- R=8%
- SI=$\frac{800\times3\times8}{100}$=192
- வட்டி விகிதம் 3 % அதிகரித்தால் கிடைக்கும் தொகை=800+192
- =992

146. ரூ .5600 ஆனது 6% வட்டி வீதத்தில் எத்தனை ஆண்டுகளில் ரூ .6720 ஆக உயரும்?

A) 3 ஆண்டுகள் B) 3 1/2 ஆண்டுகள்
C) 3 1/3 ஆண்டுகள் D) 4 ஆண்டுகள்

Explanation :

- given
- P=5600
- r =6%
- A=6720
- n=?
- solution
- A=P+SI

- SI=A-P
- =6720-5600
- SI=1120
- S.I=$\frac{pnr}{100}$
- 1120=$\frac{5600\times6\times n}{100}$
- N=$\frac{5600\times6\times n}{100}$
- N=$\frac{1120}{56\times6}$
- =$\frac{560}{56\times3}$
- n=$\frac{10}{3}$
- N=3 $\frac{1}{3}$ஆண்டுகள்

147. ஆண்டுக்கு 8% தனிவட்டி விதத்தில் ஒரு தொகை ரூ.13000 எத்தனை ஆண்டுகளில் ரூ.15,080 ஆக உயரும்?

A) 2 ஆண்டுகள் B) 3 ஆண்டுகள்
C) 4 ஆண்டுகள் D) 5 ஆண்டுகள்

Explanation :

- P=13000
- r =8%
- A=15080
- N=?
- Solution:
- A=P+SI
- SI=A-P
- =15080-13000
- SI=2080
- S.I=$\frac{pnr}{100}$
- 2080=$\frac{13000\times8\times n}{100}$
- 208=13× 8 × $N$
- N=$\frac{208}{104}$
- N=2 ஆண்டுகள்

148. ஒரு குறிப்பிட்ட அசலானது 6 ஆண்டுகளில் ரூ 8,800 ஆகவும் 4 ஆண்டுகளில் ரூ. 7920 ஆகவும் மாறுகிறது எனில் அசல் மற்றும் வட்டி வீதம் காண்க.

A) ரூ.8,500,12% B) ரூ.7,000,6%
C) ரூ.7,500,8% D) ரூ.6,000,8%

Explanation :

- GIVEN
- n =6 ஆண்டுக்கு 8800 →1

- n =4 ஆண்டுக்கு 7920 →2
- P =?
- R=?
- Solution:
- 1-2
- 2 ஆண்டுக்கு=960
- 1 ஆண்டுக்கு=480
- 4 ஆண்டுக்கான வட்டி=4× 480 =1920
- From equation 2 =>
- A=7920
- SI=1920
- P=A-SI=7920-1920
- P=6000
- S.I=$\frac{pnr}{100}$
- 1920=$\frac{6000\times4\times r}{100}$
- R=$\frac{192}{24}$
- R=8%

149. பிரியா என்பவர் மகிழுந்து வாங்குவதற்காக ரூபாய் 15,000ஐ 10% தனிவட்டி என்ற விதத்தில் கடனாக பெற்றார். அவர் ரூ.9000 ஐ கடனை முடிக்கும் தருவாயில் வட்டியாக செலுத்தினார் எனில் ,கடனைப் பயன்படுத்திய காலத்தை கணக்கிடுக.

A) 3 வருடங்கள் B) 5 வருடங்கள்
C) 5 வருடங்கள் D) 6 வருடங்கள்

Explanation :

- P=15000
- r =10%
- SI=9000
- N=?
- SOLUTION:
- S.I=$\frac{pnr}{100}$
- 9000=$\frac{15000\times10\times n}{100}$
- n=$\frac{90}{15}$
- n=6 வருடங்கள்

150. ஒரு குறிப்பிட்ட அசலானது 8% வட்டி வீதத்தில் எத்தனை ஆண்டுகளில் மூன்று மடங்காகும் என காண்க?

A) 20 ஆண்டுகள் B) 25 ஆண்டுகள்
C) 30 ஆண்டுகள் D) 35 ஆண்டுகள்

Explanation :

- Given:
- r =8%
- மடங்கு=3
- n =?
- Solution:
- n=$\frac{(மடங்கு-1)\times100}{}$
- n=$\frac{(3-1)\times100}{8}$
- n=$\frac{200}{8}$
- n=25 ஆண்டுகள்

TNPSC_PRE_COACHING
TNPSC_PRE_COACHING